



இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான ஆய்வு

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான அறிக்கை

ஜுன் 2018

பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா, கு. ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்



cepa
centre for poverty analysis

# இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான ஆய்வு

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான அறிக்கை

---

ஜுன் 2018

பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா,
கு. ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்

© பதிப்புரிமை - வறுமை ஆராய்ச்சி நிலையம்

முதற்பதிப்பு – 2018

ISBN - 978-955-3628-08-4

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்: மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான அறிக்கை / பாசித் ஜனதீன், இசுறு தென்னக்கோன், மேகலா மகிழ்ராஜா, ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன் கொழும்பு: வறுமை ஆராய்ச்சி நிலையம், 2018 -
ப.42; செ.மீ. 28.

ISBN - 978-955-3628-08-4

i. 373.07205493 டிவி 23 ii. தலைப்பு
1. இரண்டாம் நிலைக் கல்வி: இலங்கை-ஆய்வு

இப்பதிப்பிற்கான முழு பதிப்புரிமையானது வறுமை ஆராய்ச்சி நிலையத்துக்கே உரிமையானதாகும். இந்நூலின் எந்தவொரு பகுதியும் நூலாசிரியர்/கள் மற்றும் பதிப்பாசிரியர்களின் ஒப்புதலுக்கேற்ப மீள பதிப்பு செய்யப்படலாம்.

ஆய்வுகள், திருத்தப்பட்ட தொகுதிகள், பணி அறிக்கைகள் (working paper), சுருக்கமான ஆவணங்கள் போன்றன தற்போது CEPA வெளியீடுகளில் உள்ளடக்கப்படுகின்றன. இந்த ஆய்வில் வெளியிடப்பட்ட கண்டறிவுகள் மற்றும் பரிந்துரைகள் போன்றன அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொதுசேவைப் வழங்குனர்கள் மற்றும் பொதுசேவை பெறுனர்களால் வழங்கப்பட்டவைகளாகும். CEPA அல்லது நன்கொடையாளர்களின் கருத்துகள் அல்லது கொள்கைகளை இந்த ஆய்வானது பிரதிபலிக்கவில்லை

இந்த பதிப்பு தொடர்பான அனைத்து விசாரணைகளுக்கும் தொடர்புகொள்வதற்கு

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 ஆர்.ஜி சேனநாயக்கமாவத்தை, கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி: + 94(011) 2676 955, 4690200
தொலைநகல்: +94(011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

இந்த ஆவணம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் (CEPA) முழுப் பொறுப்பாகும் என்பதோடு எந்தவொரு சூழ்நிலையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டினைப் பிரதிபலிப்பதாக கருதமுடியாது.

# நூலாசிரியர்கள்

### பாசித் ஜனதீன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தர் ஆவார். இவர் கொழும்புப் பல்கலைகழகத்தில் சமூக விஞ்ஞானப் பிரிவில் தனது கலைமாணி பட்டத்தினைப் பெற்றார். பல்வேறு பங்குதாரர் செயன்முறை மற்றும் சமூகக் கற்கைகள் தொடர்பாக நெதர்லாந்து, வாஹனிங்ஹன் பல்கலைக்கழகத்திலிருந்தும் ,சமூகப்பொறுப்புடைமைக் கருவிகள் குறிப்பாக, குடிமக்கள் அறிக்கை அட்டை முறைமை தொடர்பாக இந்தியாவில் பெங்களூரிலுள்ள பொதுவிவகாரங்கள் மையத்திடமிருந்தும் சர்வதேச உரிமங்களைப் பெற்றுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், திறனைகட்டியெழுப்புதல், "facilitator" மற்றும் பயிற்சியாளராகவும் அதேபோல ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபட்டுள்ளதோடு ஆய்வு நடவடிக்கை மற்றும் செயன்முறையில் தனது நிபுணத்துவத்தினை கையாளுகின்றார். சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணிபுரிவதில் முக்கிய பங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்புக்கூறும் பொறி முறைகள் தொடர்பான திறனைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டல்களை வழங்குவதோடு வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும் பணியாற்றி வருகின்றார். வவுனியா மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் 2014ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுச் செயன்முறைக்கும் மற்றும் வெளியீட்டிற்கும் வழிவகுத்தார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் சிறந்த நல்லாட்சி கருவியாகிய குடிமக்கள் அறிக்கை அட்டையினை வழிநடாத்தி வருகின்றார்.

### இசுரு தென்னகோன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். இவர் தற்போது கொழும்பு பல்ழகலைகழகத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை பயின்று வருவதோடு பொருளாதாரத்தில் குறிப்பாக பொருளாதாரக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் இளமானி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைகழகத்தில் இருந்து பெற்றுள்ளார். ஆலோசனை உளவியல் தொடர்பில் டிப்ளோமாவை பெற்றுள்ளதோடு ஒரு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். இசுரு ஒரு கவிஞர் என்பதோடு அவர் இதுவரை மூன்று கவிதை புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவர் முன்பு இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், ஆய்வு உதவியாளராகவும் பணியாற்றியுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், இவர் வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும், தகவல் தொடர்பாடல் குழுவிலும் பணியாற்றி வருகின்றார். இவர் தற்போது குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பில் கவனம் செலுத்துகின்ற ஒரு ஆய்வில் ஈடுபட்டுள்ளதோடு மொனராகலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்விற்கு இவரே கள ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்

### மேகலா மகிழ்ராஜா

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தராவார். இவர் பேராதனை பல்கலைகழகத்தில் அபிவிருத்தி நடைமுறைகள் தொடர்பாக முதுகலைமாணி பட்டத்தினை பெற்றுள்ளார். அத்தோடு இலங்கை மதிப்பீட்டு (Sri Lanka Evaluation Association -SLEvA) சங்கத்துடன் இணைந்த தேசிய தொழில்துறை நிறுவனத்தில் (National Institute of Labour Studies -NILS) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் டிப்ளோமா பாடநெறியையும் நிறைவு செய்துள்ளார். இவர், வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் அதேபோல ஆராய்ச்சி போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளதோடு ஆய்வு நடவடிக்கைகளில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது இவர் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணி புரிவதில் முக்கிய பங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்பு பொறிமுறைகள் குறிப்பாக "குடிமக்கள் அறிக்கை அட்டை" எனும் கருவி தொடர்பான திறனை கட்டியெழுப்புவதற்கான ஆதரவினை வழங்குகின்றார். இவர் குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பான ஆய்வில் தனது பங்களிப்பினை வழங்கியதோடு 2014ல் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பான வெளியீட்டிலும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

### குலசபாநாதன் ரொமேஷன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தராகவும் முகாமைத்துவ குழுவின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் அபிவிருத்தி துறையில் அரசு மற்றும் நிதி நிறுவனங்களுடன் கடந்த 20 வருடங்களாக பணியாற்றியுள்ளார். இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் நிதியியல் பொருளாதாரத்தில் தனது முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். வறுமையின் முகங்கள் தொடர்பாக ஆய்வு செய்கின்ற அணியின் தலைவர் என்ற வகையில்,இவரும் அவரது அணியும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளில் பெறப்படுகின்ற வறுமை, சமத்துவமின்மை மற்றும் சுபீட்சம் தொடர்பான விடயங்களை சேகரிப்பதற்கு பொறுப்பானவர்களாவர். மேலும்,வறுமையின் முகங்கள் தொடர்பான குழுவானது வறுமை அளவீடு குறித்து பணியாற்றுவதோடு வறுமை மீது தாக்கம் செலுத்துகின்ற பேரினக் காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

### ஹசந்தி தென்னகோன்

தஸ்மானியா பல்கலைகழகத்தில் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் முதுமாணி பட்டத்தினை பெற்றுள்ளதோடு, பெருநிறுவனங்களின் பேண்தகைமை தொடர்பாக விரிவான அனுபவத்தினை கொண்டுள்ளார். சுற்றுச்சூழல் மற்றும் சமூக பேண்தகைமை தொடர்பான விடயங்களில் இவர் கவனம் செலுத்துகின்றார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கான ஆய்வு ஆலோசகராக கடமையாற்றுவதோடு உலக வங்கியில் சமூக பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்.

### வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) பற்றி

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Center for Poverty Analysis-CEPA), வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை வழங்குகின்ற இலங்கையின் சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். "வறுமை என்பதொரு அநீதியாகும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டியதே" என வறுமை ஆராய்ச்சி நிலையம் நம்புவதோடு அதனை மையப்படுத்தி தனது ஆய்வுகளை முற்படுத்தி வலியுறுத்துகின்றது. அத்தோடு அத்தோடு வறுமையை வெற்றிகொள்வதென்பது தேசிய மற்றும் சர்வதேச ரீதியான கொள்கைகள், நடைமுறைகள் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதையும் அதேபோல வறுமையிலுள்ள மக்களுடன் இணைந்து செயற்படுவதையும் உள்ளடக்குகிறது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது சுயாதீனமான பகுப்பாய்வு, அபிவிருத்தி வகிபங்காளர்களின் திறனைக் கட்டியெழுப்புதல், மற்றும் கொள்கை அழுத்தங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறிதல் தொடர்பான அம்சங்களை முக்கியத்துவப்படுத்தி வலியுறுத்துகின்றது. சந்தையின் தேவைகளுக்கேற்ப பிரதிபலிக்கின்ற அதேவேளை, பலமான அனுபவரீதியான ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்ட சேவை வழங்குதல் தொடர்பான எமது வலுவான நோக்குநிலையானது எம்மீது செல்வாக்கு செலுத்துகின்றது. வாடிக்கையாளர் கோரிக்கைகளின் மூலம் இந்தசந்தை நோக்குநிலையை வறுமை ஆராய்ச்சி நிலையம் பராமரிக்கின்றது. இறுதியாக தேசியரீதியாக, பிராந்தியரீதியாக, துறைரீதியாக, நிகழ்ச்சிதிட்டம் மற்றும் திட்டஅளவில் வறுமையோடு தொடர்புடைய அபிவிருத்திக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்புச் செய்வதற்கு வறுமை ஆராய்ச்சிநிலையம் முயற்சிக்கின்றது. மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையமானது உட்கட்டமைப்பு, குடிப்பெயர்வு, சுற்றுச்சூழல், முரண்பாடு மற்றும் நலினத்துவம் போன்ற ஐந்து பரந்த கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு இணையான சுயாதீன ஆராய்ச்சியினையும் தொடர்கின்றது.

## விளக்கப்படங்களின் பட்டியல்


விளக்கப்படம் 1: ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள பாடசாலைக்குச் செல்லல் 8
விளக்கப்படம் 2: ஒரு கிராமசேவகர் பிரிவுக்கு வெளியே உள்ள பாடசாலைக்கு செல்வதற்கான காரணங்கள் 9
விளக்கப்படம் 3: கல்வியின் தரம் குறித்த ஒட்டுமொத்த திருப்தி 9
விளக்கப்படம் 4: ஏறாவூர் பிரிவின் கல்வியின் தரம் குறித்த திருப்தி 10
விளக்கப்படம் 5: கோரளைப்பற்று பிரிவின் கல்வியின் தரம் குறித்த திருப்தி 10
விளக்கப்படம் 6: மண்முனை தென்மேற்கு பிரிவின் கல்வியின் தரம் குறித்த தருப்தி 10
விளக்கப்படம் 7: போறதீவுப்பற்று பிரிவின் கல்வியின் தரம் குறித்த திருப்தி 10
விளக்கப்படம் 8: தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் 11
விளக்கப்படம் 9: ஏறாவூர் பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் 11
விளக்கப்படம் 10: கோரளைப்பற்று பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் 11
விளக்கப்படம் 11: மண்முனை தென்மேற்கு பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் 12
விளக்கப்படம் 12: போறதீவுப்பற்று தென்மேற்கு பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் 12
விளக்கப்படம் 13: வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு 13
விளக்கப்படம் 14: பாடசாலைகளால் கோரப்பட்ட மேலதிக கட்டணங்கள் 13
விளக்கப்படம் 15: பாடசாலைக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகள் 14
விளக்கப்படம் 16: பாடசாலைகளில் வழங்கப்பட்ட தண்டனை தொடர்பான விடயங்கள் 14
விளக்கப்படம் 17: மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனைகள் 15
விளக்கப்படம் 18: பாடசாலைகளில் இடம்பெறும் பாகுபாடுகள் 15
விளக்கப்படம் 19: பாடசாலைகளில் நிகழும் துஷ்பிரயோகங்கள் 16
விளக்கப்படம் 20: ஆசிரியர்கள் தொடர்பான சிக்கல்கள் 16
விளக்கப்படம் 21: இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள் 18
விளக்கப்படம் 22: உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 19
விளக்கப்படம் 23: ஏறாவூர்நகர பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 20
விளக்கப்படம் 24: கோரளைப்பற்று பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 20
விளக்கப்படம் 25: மண்முனை தென்மேற்கு பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டைவேண்டி நிற்கின்ற பகுதிகள் 21
விளக்கப்படம் 26: போறதீவுப்பற்று பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 21


## சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| ACLG | Assistant Commissioner of Local Government - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் |
| EU | European Union - ஐரோப்பிய ஒன்றியம் |
| CEPA | Centre for Poverty Analysis - வறுமை ஆராய்ச்சி நிலையம் |
| CSO | Civil Society Organisation - சிவில் சமூக அமைப்பு |
| CRC | Citizen Report Card - குடிமக்கள் அறிக்கை அட்டை |
| eCRC | Electronic Citizen Report Card - இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை |
| DS | Divisional Secretary - பிரதேச செயலகம் |
| DDE | Deputy Director of Education - பிரதி கல்விப் பணிப்பாளர் |
| GNDs | GramaNiladhari Divisions - கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் |
| PS | Pradeshiya Sabha - பிரதேச சபை |
| WRDS | Women’s Rural Development Society - மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| RDS | Rural Development Society - கிராம அபிவிருத்தி சங்கம் |

# நன்றியுரை

இந்த ஆய்விற்கு ஆதரவளித்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Centre for Poverty Analysis-CEPA) நன்றி தெரிவிக்க விரும்புகின்றது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது ACTED உடன் இணைந்து மேற்கொண்ட “சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக அபிவிருத்தியை எட்டும் பொருட்டு பொதுமக்கள் சார் சமூக அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்குமிடையேயுள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்” எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வினை (Citizen Report Card-CRC) வடிவமைப்பதிலும், முன்னெடுப்பதிலும் CEPA முன்னணி வகித்தது.

மட்டகளப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் வலையக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் போன்றோரால் எமக்கு வழங்கப்பட்ட ஆதரவின் மூலம் இந்த ஆய்வு சாத்தியமானது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பின்வரும் சிவில் சமூக

| தொ.இல | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமசேவகர் பிரிவு | சிவில் சமூக அமைப்புகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | மண்முனை தென்மேற்கு | கடுக்காமுனை | ஆதவன் சமூக மையம் |
| 2 | மண்முனை தென்மேற்கு | அரசடித்தீவு வடக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 3 | மண்முனை தென்மேற்கு | முனைக்காடு மேற்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 4 | மண்முனை தென்மேற்கு | முனைக்காடு வடக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 5 | மண்முனை தென்மேற்கு | கொக்கட்டிச்சோலை | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 6 | மண்முனை தென்மேற்கு | மகிழடித்தீவு தெற்கு | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 7 | கோரளைப்பற்று தெற்கு | கோறகல்லி மடு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 8 | கோரளைப்பற்று தெற்கு | கிரான் கிழக்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 9 | கோரளைப்பற்று தெற்கு | தேவபுரம் | நட்சத்திரா மாதர் சங்கம் |
| 10 | கோரளைப்பற்று தெற்கு | திகிலிவெட்டை | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 11 | கோரளைப்பற்று தெற்கு | வாகனேரி | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 12 | போறதீவுப்பற்று | செல்வபுரம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 13 | போறதீவுப்பற்று | வன்னிநகர் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 14 | போறதீவுப்பற்று | மாவேற்குடா | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 15 | போறதீவுப்பற்று | கோவில் போறதீவு மேற்கு | மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| 16 | போறதீவுப்பற்று | கணேசபுரம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 17 | போறதீவுப்பற்று | சின்னவதை | வள்ளுவர் சமூக மையம் |
| 18 | ஏறாவூர் நகரம் | ஐயங்கேணி முஸ்லிம் | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 19 | ஏறாவூர் நகரம் | மீராக்கேணி | கிராம அபிவிருத்தி சங்கம் |
| 20 | ஏறாவூர் நகரம் | மிச்நகர் | கிராம அபிவிருத்தி சங்கம் |

இந்த ஆய்விற்கு தேவையான தகவல்களை வழங்கிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் மதிப்புமிக்க பங்களிப்பிற்கு வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

# உள்ளடக்கம்


1. அறிமுகம் 1

1.1. திட்டம் 1

1.2. அறிக்கையின் செயற்பரப்பெல்லை 1

1.3. ஆய்வின் நோக்கம் 1

1.4. மாதிரி வடிவமைப்பு 2

1.5. ஆய்வு முறைமை 3

1.5.1. குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன? 3

1.5.2. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) என்றால் என்ன? 4

1.5.3. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு 5

1.5.4. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல் 5

1.5.5. செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம் 6

1.6. ஆய்வுப் பிரதேசம் 7

2. பிரதான கண்டறிவுகள் 8

2.1. இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல் 8

2.2. இரண்டாம் நிலை கல்வி சேவைகளுடனான தரம் மற்றும் திருப்தி 9

2.3. வசதிகள் 12

2.4. மேலதிக கட்டணங்கள் 13

2.5. ஏனைய அசௌகரியங்கள் 14

3. இரண்டாம் நிலைக் கல்விச் சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு 17

4. பரிந்துரைகள் 19

4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 19

4.1.1. உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் 19

4.1.2 ஏனைய பரிசீலணைகள் 20

4.2. முன்னோக்கிய நகர்வு 21

# 1. அறிமுகம்

## 1.1. திட்டம்

சேவை வழங்குனர்களின் பொறுப்புணர்வினை உறுதிசெய்கின்ற அதேவேளை சிறந்த அணுகல் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குனர்களுடன்) ஒத்துழைக்க சிவில் சமூக அமைப்புகளைப் பலப்படுத்த வேண்டும் என்பதே *"சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக அபிவிருத்தியை எட்டும் பொருட்டு பொதுமக்கள் சார் சமூக அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்குமிடையேயுள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்"* எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் நோக்கமாகும். பின்வரும் திட்ட முடிவுகளை அடைவதற்கு ACTED மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) ஒத்துழைப்பு வழங்குகின்றன. ஆய்வு செய்யப்பட்ட பொது சேவை வழங்கல் தொடர்பான அடிப்படை தரவினை இந்த ஆய்வானது வழங்கிய போதிலும், ஆண்டின் இறுதிப்பகுதியில் முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கு 2வது கட்ட ஆய்வு திட்டமிடப்பட்டுள்ளதோடு, 2018 டிசம்பரில் இது தொடர்பான கண்டறிவுகள் வெளியிடப்படும்.

ACTED பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது (RI & R2):

- R1 – தமது பணிப்பாணைகள் மற்றும் உள்ளூர் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான திறன் போன்றவற்றினை செயற்படுத்துவதற்கான சிவில் சமூக அமைப்புகளின் ஆற்றலை மேம்படுத்துதல்.
- R2 – சமூக சேவைகள் என்ற அடிப்படையில் உள்ளூர் தேவைகள் மற்றும் இடைவெளிகள் போன்றன பல "பங்குதாரர்கள் பங்களிப்பு அணுகுமுறை" மூலமாகவும்,சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகள் மூலமாகவும் அடையாளம் காணுதல்.

வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது (R3):

R3 – சேவை வழங்குனரின் சிறந்த பொறுப்புடைமையினை மேம்படுத்துவதற்காக சமூக சேவை வழங்கல்/தரம் குறித்த மேம்பட்ட கண்காணித்தல் மற்றும் பிரதானமாக சிறந்த நடைமுறைகளை பரவலாக்குதல்.

இதில் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் (CEPA) பின்வரும் ஏராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன மற்றும் மேற்கொள்ளப்படவுள்ளன:

- பல்வேறு மட்டங்களில் பொது சேவை வழங்குனர்களை அடையாளப்படுத்தல்
- இலக்கிடப்பட்ட சிவில் சமூக அமைப்புகளிலிருந்துதரவு சேகரிப்பவர்களை தேர்தெடுத்தல்,
- குடிமக்கள் அறிக்னை அட்டை செயன்முறை தொடர்பாக கணக்கெடுப்பாளர்களை பயிற்றுவித்தல்,
- வினாகொத்தினை வடிவமைத்தல் மற்றும் தரவு சேகரித்தல் போன்றவற்றை வசதிப்படுத்தல்,
- அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குனர்களுடன்) கண்டறிவுகளை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இடைவெளிகளை நிரப்புவதற்கான செயற்பாடுகளை விருத்தி செய்வதில் அவர்களுக்கு ஆதரவளித்தல்.

## 1.2 அறிக்கையின் செயற்பரப்பெல்லை

ஏறாவூர் நகரம், போறதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற பிரதேச செயலகப்பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வினை அடிப்படையாகக்கொண்டு மட்டகளப்பு மாவட்டத்தின் இரண்டாம் நிலைக் கல்வி வழங்கல் பற்றிய இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) கண்டறிவுகளை இவ்வறிக்கையானது உள்ளடக்குகின்றது.

## 1.3 ஆய்வின் நோக்கம்

ஆய்வின் குறிப்பிட்ட நோக்கங்களாவன:

(i) பொதுச் சேவைகளின் உண்மையான பயனர்களின் அணுகல், மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுகின்ற கருவியாகவும் அதேபோல அரசாங்க அதிகாரிகளின் (சேவை வழங்குனர்களின்) சமூக பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் குடிமக்கள் அறிக்கை அட்டையைப் பயன்படுத்துதல்.

(ii) இந்த ஆய்வின் கண்டறிவுகளை செயற்பாடுகளுக்கு சார்பாக பரப்புவதோடு அம்முடிவுகளை செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறை சீர்த்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்துதல்.

(iii) ஏனைய மாவட்டங்களிலுள்ள ஏனைய பொது நிறுவனங்கள் மேற்கொள்ளும் இது போன்ற முயற்சிகளுக்காக, தற்போது சேவைகளை பெறும் பயனர்களிடமிருந்து பெறப்பட்ட இவ்வனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

## 1.4 மாதிரி வடிவமைப்பு

ஒரு சேவையைப் பயன்படுத்துகின்ற மக்களின் வீதம், ஒரு சேவையுடன் மக்கள் கொண்ட திருப்தியின் வீதம் போன்ற தகவல்களைப் பிரித்தெடுப்பதினூடாக தரப்பட்ட ஆய்வுப் பிரதேசம் ஒன்றில் சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு இரண்டு அணுகுமுறைகள் பயன்படுகின்றன. குழுவிலுள்ள ஒவ்வொரு தனிநபரையும் பரீட்சித்து பார்த்தல் மற்றும் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கண்டறிவுகளை ஒருங்கிணைத்தல் போன்றன ஒரு முறையாகும். இம்முறையானது, முழுமையான கணக்கெடுப்பு அல்லது குடித்தொகை கணக்கெடுப்பு என்றழைக்கப்படுகின்றது. பாரியளவான சனத்தொகையிலிருந்து ஒரு உபதொகுதியினை தெரிவு செய்து அந்த உபதொகுதியிலிருந்து பொருத்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான மற்றொரு வழிமுறையாகும். இம்முறையானது "மாதிரி வடிவமைப்பு" எனவும் தெரிவுசெய்யப்பட்ட உபதொகுதி "மாதிரி" எனவும் அழைக்கப்படுகின்றது. மிகவும் செலவு குறைந்ததாக மற்றும் குறைந்த ஊழிய செறிவினைக் கொண்டிருப்பதால் இவ்வாய்வில், "மாதிரி வடிவமைப்பு ஆய்வு" முறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

நம்பகமான மற்றும் துல்லியமான தரவானது, மாதிரி தேர்ந்தெடுக்கப்படும் முறையிலேயே தங்கியுள்ளது. ஆய்வுப் பகுதியில் காணப்படுகின்ற மொத்த சனத்தொகையின் மாறுபாடுகள் மற்றும் பண்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கின்ற போது ஒரு மாதிரியானது சிறந்ததாக அமைகின்றது.

இரண்டு வகையான சேவைகளுக்காக இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை முன்னெடுக்கப்பட்டது. ஒன்று இரண்டாம் நிலை இலவசக்கல்வி மற்றொன்று பிரதேச சபை சேவைகள். முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ACTED மூலம் தெரிவுசெய்யப்பட்ட 60 கிராமசேவகர் பிரிவுகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை உள்ளடக்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 60 கிராமசேவகர் பிரிவுகளில் 1200 குடும்பங்கள் அல்லது ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள 20 கிராமசேவகர் பிரிவுகளில் 400 குடும்பங்களாக ஆய்விற்கான மாதிரியளவு தீர்மானிக்கப்பட்டது. 20 கிராமசேவகர் பிரிவுக்கும் 400 குடும்பங்கள் எனும் மாதிரியளவானது பின்னர் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை போன்ற மூன்று மாவட்டங்களிலும் மாதிரி வடிவமைப்பு செயன்முறையானது பல கட்டங்களில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில், கிராமசேவகர் பிரிவுக்குள் காணப்படுகின்ற குடும்பங்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் மூலம், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் பாடசாலைக்கு செல்லும் (தரம் 5 – தரம் 13 வரை) வயதுடைய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, பட்டியலிடப்பட்டன. இவற்றுள், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளுக்காக கணக்கிடப்பட்ட மாதிரியளவினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்விற்கான குடும்பங்களின் மாதிரியானது எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டது. அதேவேளை பிரதேச சபை சேவைகள் தொடர்பான ஆய்விற்கென, மாதிரியானது ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை உள்ளடக்கிய குடும்பங்களில் இருந்து பெறப்பட்டதோடு பிரதேச சபையினால் வழங்கப்படும் குறைந்தது ஒரு சேவையையாவது கடந்த ஒருவருட காலத்தில் பயன்படுத்திய அல்லது பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற குடும்பங்களாக இருக்க வேண்டும் என்ற அளவுகோலின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டது. கிராமசேவகர் பிரிவிலுள்ள அனைத்து கிராமங்களையும் பிதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் பரந்தளவிலான பகுதிகளை உள்ளடக்கி இன ரீதியிலான விகிதாரம் எனும் கண்ணோட்டத்தினை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிகளில் இருந்தும் மாதிரி வடிவமைப்பானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மொத்தமாக 1240 குடும்பங்கள் (மட்டக்களப்பு மாவட்டத்தில் 414, மொனராகலை மாவட்டத்தில் 418 மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 408) இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வில் மாதிரிகள் பங்கேற்றிருந்தன. இவற்றில், அனைத்து தரப்பரிசோதனைகளையும் தொடர்ந்து மூன்று மாவட்டங்களிலுள்ள 60 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 1200 குடும்பங்கள் மாத்திரமே பகுப்பாய்விற்கென தீர்மானிக்கப்பட்ட மாதிரிகளாகும்.

பின்வரும் மாதிரி வடிவமைப்புக் கூறினை (sampling matrix) அடிப்படையாகக் கொண்டு மாதிரியாக்கம் தீர்மானிக்கப்பட்டது:

| சனத்தொகை (குடும்பங்கள்) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (95 % நம்பிக்கையாயிடை) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாதிரியளவு (90 % நம்பிக்கையாயிடை) |
|---|---|---|
| 100 | 80 | 66 |
| 500 | 217 | 141 |
| 1000 | 278 | 164 |
| 5,000 | 357 | 189 |
| 10,000 | 370 | 192 |
| 30,000 | 379 | 195 |
| 50,000 | 381 | 195 |
| 100,000 | 383 | 196 |
| 200,000 | 383 | 196 |

கீழே தரப்பட்ட செயற்கைகோள் படமானது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளின் பரவலாக்கத்தினை காட்டி நிற்கின்றது.




## 1.5. ஆய்வு முறைமை

### 1.5.1. குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன?

குடிமக்கள் அறிக்கை அட்டையானது (Citizen Report Card-CRC), இலவசமாக வழங்கப்படுகின்ற பொது சேவைகளின் செயற்திறன் குறித்து அச்சேவையினை பெறுபவர்களிடமிருந்து முறையான மற்றும் அனுபவங்கள் தொடர்பான கருத்துக்களை பெறக்கூடிய ஒரு எளிமையான, சக்திவாய்ந்ததொரு கருவியாகும். இவ்வாய்வு முறையானது குறித்த சேவையைப் பெற்றுக்கொள்பவர்களிடம் இருந்து அச்சேவைகளின் தரம், அதனைப் பெற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் அச்சேவை போதியளவு வழங்கப்படுகின்றதா? மற்றும் அச்சேவை பற்றிய திருப்தி நிலை தொடர்பான கருத்துக்களை சேகரிக்கின்ற ஒரு பங்கேற்பு ஆய்வாகும். சேவை வழங்குனர்களுடன் ஒரு உரையாடலில் ஈடுபடுவதற்கு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக சேவை வழங்குனர்களை பொறுப்புணர்வுடன் இருக்கச் செய்வதற்கு சமூகங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் அல்லது உள்ளூராட்சி சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு பலமான மற்றும் செயற்திறன் வாய்ந்த ஒரு அணுகுமுறையினை குடிமக்கள் அறிக்கை அட்டை வழங்குகின்றது. ஆரம்பத்தில் குடிமக்கள் அறிக்கை அட்டைநகர்ப்புற சூழ்நிலைகளில் நடத்தப்பட்டிருந்தாலும், இப்போது பரந்தளவிலான புவியியல் மற்றும் துறைசார்ந்த சூழ்நிலைகளில் பொது சேவை வழங்கலின் நிலையைப் புரிந்துகொள்ள இது உதவுகின்றது.

குடிமக்கள் அறிக்கை அட்டை பல நன்மைகளை வழங்குகின்றது. சேவை வழங்குனர்கள் தாங்கள் வழங்குகின்ற பொதுச் சேவைகளானது பொதுமக்களை குறிப்பாக, போதிய வசதிகளற்ற உறுப்பினர்களை சென்றடைவதற்கான குறைந்த செலவுடைய வழிமுறையை கண்டறிய உதவுகின்றது. இதனையொட்டி, பொது சேவைப் பெறுநர்கள் தாங்கள் பெற்றுக்கொள்கின்ற சேவைகளின் தரம், செயல்திறன், மற்றும் போதியத்தன்மை குறித்தும் அதேபோல சேவை வழங்குனர்களுடன் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் தமது கருத்துக்களை உள்ளூர் அரசாங்கத்திற்கு மற்றும் அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. பல்வேறு சேவை வழங்குனர்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், பல்வேறுபட்ட சேவைகளுக்கிடையில் தமது மதிப்பீடுகளை ஒப்பிடுவது சாத்தியமாகின்றது. இதன் விளைவாக மதிப்பீடானது (சேவைப்பெறுநரின் திருப்தியினை அடிப்படையாகக் கொண்டது), குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றிற்கான பொது சேவை வழங்கலின் செயற்திறன் தொடர்பான 'அறிக்கை அட்டையாக' மாற்றப்படுகிறது. பொது சேவைப் பெறுநர்களின் அனுபவங்களை குடிமக்கள் அறிக்கை அட்டை பிரதிபலிக்கும் வகையில், மேற்கொள்ளப்படும் சேவை வழங்கல் தொடர்பான ஒரு கருத்துக்கணிப்புடன் குடிமக்கள் அறிக்கை அட்டையை ஒப்பிட்டு பார்க்க முடியாது. உதாரணமாக, குடிமக்கள் அறிக்கை அட்டைகளை உருவாக்கும் ஆய்வுகளானது, குறிப்பிட்ட சேவைகளைப் பயன்படுத்துகின்ற தனிநபர்களை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கும்.

உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் என ஆரம்பித்து 20 இற்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள அபிவிருத்தி பங்காளர்கள் வரையான பல்வேறு நிறுவனங்களில் குடிமக்கள் ஈடுபாடு, பங்கேற்பு மற்றும் சேவை மேம்பாடுகளுக்கான ஒரு கருவியாக குடிமக்கள் அறிக்கை அட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கருவி பொதுவாக, குடிமக்கள் மற்றும் அரசாங்கத்துகிடையிலான ஈடுபாட்டின் அடிப்படையில் தரவினை உருவாக்குவதோடு செல்வாக்கு செலுத்தும் பல பகுதிகளில் இதனுடைய பயன்களை விரிவுபடுத்திக்கொள்ள முடியும். உதாரணமாக, பொதுக் கொள்கைகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் அறிவிப்பதற்கான, அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவை வழங்கல் பொறிமுறைகளை மறுசீரமைப்பதற்கான, மற்றும் அரசாங்க மற்றும் சமூக நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான அடிப்படையாக இது மாற முடியும்.

மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மிகவும் பின்தங்கிய மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்களில் கவனம் செலுத்திய இக்குறிப்பிட்ட ஆய்வில் ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு குரல் கொடுப்பதற்கான ஆற்றல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. தமது சொந்த விருப்பங்களை மேற்கொள்ள, அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மற்றும் நம்பகமானதும் நிலையானதுமான வாழ்க்கைக்கு வழிவகுப்பதற்கு சமூகங்களுக்கு அதிகாரமளித்தலே நோக்கமாக இருந்தது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, சமூக அடிப்படையிலான ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை வாய்ந்த சேவைகளை மதிப்பிடுதல் தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையம் கவனம் செலுத்தியது. வறியோர் சார்பு மற்றும் உரிமைகள் அடிப்படையிலான கண்ணோட்டத்திலிருந்து ஏற்கனவே உள்ள நடைமுறைகள் அதேபோல கொள்கைகளில் அழுத்தங்களை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்தது.

### 1.5.2 இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) என்றால் என்ன?

தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி, வசதி மற்றும் அதன் சக்திகள் போன்றவற்றினை கையாளக்கூடிய குடிமக்கள் அறிக்கை அட்டைகளை முன்னெடுப்பதற்கான ஒரு புரட்சிகரமான அணுகுமுறையே இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை அல்லது eCRC எனப்படுகிறது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையானது "ஆண்ராய்ட்" அடிப்படையிலான கையடக்கத் தொலைபேசி (Android –based mobile) பயன்பாடுகளினூடக குடிமக்கள் கருத்துக்களின் நம்பகமான சேகரிப்பினை உறுதிப்படுத்துவதோடு சரியான மற்றும் உரிய நேரத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்து அறிக்கையிட முடிகின்றது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையினைப் பயன்படுத்துவதற்கு பல படிமுறைகள் காணப்படுகின்றன.

#### (a) ஆய்வினை மேற்கொள்ளுதல்

பொதுமக்களின் கருத்து மற்றும் அனுபவங்கள் பற்றிய ஒரு அறிவியல் சார் மாதிரி ஆய்வானது, கைப்பேசியொன்றின் பயன்பாட்டினைப் பயன்படுத்தி ஒரு டெப்லெட் (tablet) மூலமாக நடாத்தப்படுகின்றது. தொலைபேசிகள்/டெப்லெட்களில் உள்ள பூகோள நிலைப்படுத்தல் அமைப்பு முறை (GPS) எனும் கண்காணிப்பு முறை மூலம் தரவு சேகரிக்கப்பின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு, உறுதிப்படுத்தப்படுகின்றது.

#### (b) தரக்கட்டுப்பாட்டிற்கான தொலைதூரக் கண்காணிப்பு

உண்மை நேர அடிப்படையில் ஆய்வின் முன்னேற்றத்தை கண்காணிக்க, ஆய்வு முகாமையாளர்களுக்கு, ஒரு வலைதளத்தை மையப்படுத்திய ஆய்வு முகாமைத்துவ தொகுதி உதவுகின்றது. இத்தொகுதியானது, தொலைதூரக் கண்காணிப்பு, ஆய்வு நடவடிக்கைகளின் முகாமைத்துவம் போன்றவற்றினை செயற்படுத்துவதால், மிகச்சிறப்பான தரக் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றது.

#### (c) தரவுப் பகுப்பாய்வு

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஆன்லைன் டாஷ் போர்ட் (online dash board) மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற கருவிகளானது, பல்வேறுபட்ட பங்குதாரர் (உதாரணமாக, கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், அரசியல் பிரதிநிதிகள், மற்றும் குடிமக்கள் போன்றோர்) குழுக்களின் தகவல் தேவைகளை அடையாளப்படுத்துகின்றது. அட்டவணைகள், விளக்கப்படங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியவற்றின் மூலமாக இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் ஆய்வின் முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன. செயற்திறன் மட்டங்கள் தொடர்பான இலகுவான அனுமானங்களை வழங்குவதற்கு எளிமையான நிறக்குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வினை அறிக்கைப்படுத்துவதற்காக இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை மொபைல் டெப்லெட்கள் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன:

- இது மிகவும் துல்லியமான தரவினை உருவாக்குகின்றது.
- உடனடி முடிவுகளை வழங்குகின்றது.
- ஆய்வு நடைபெறும் புவியியல் இருப்பிடத்தினை/தரவு சேகரிக்கப்படுகின்ற புவிப்பரப்பை வரைபடத்தில் காட்டுகின்ற முறையை செயற்படுத்துகின்றது.
- இது ஒரு தடவை முதலீட்டு செலவினைக் கொண்டிருப்பதாலும், நேர விரயத்தினை குறைத்துள்ளதாலும் ஆய்வினை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும்/செயற்படுத்தும் வகையில் இலகுவாக்கப்பட்டுள்ளது.

### 1.5.3. குடிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 கிராமசேவகர் பிரிவுகளுக்கென இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முறையானது வடிவமைக்கப்பட்டது. ஆய்விற்கென அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்களின் நிலை மற்றும் பிரதேச சபைகளின் சேவை வழங்கல் போன்றவற்றினை உள்ளடக்கும் வகையில் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்களுடனான கலந்துரையாடலில் ஆய்வு நேரம் மற்றும் ஆய்விற்கு தேவையான வசதிகள் குறித்து முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிவில் சமூக அமைப்புகளின் (CSO) குழு ஒன்றினால் ஆய்வானது நடாத்தப்பட்டது. வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் அதேபோல ACTED கள உத்தியோகத்தர்களின் நேரடி மேற்பார்வையுடன் மூன்று மாவட்டங்களிலும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு மாவட்ட ரீதியாக பயிற்சியளிக்கப்பட்டது.

### 1.5.4 குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல்

சமூகம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல்களின் (Focus Group Disscussion-FGDs) போது, (i) பிரதேச சபைகளின் சேவை வழங்கல், (ii) இரண்டாம் நிலைக் கல்விச்சேவை (தரம் 5 – தரம் 13) வழங்கல் ஆகிய இரண்டு சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டிய சேவைகளாக முன்னுரிமைப்படுத்தப்பட்டது. இந்த முன்னுரிமைகளானது, ACTED கிராம அபிவிருத்தி திட்டங்களில் (Village Development Plans-VDPs) சுட்டிக்காட்டப்பட்ட முன்னுரிமைகளுடன் ஒத்திருந்தது.

இவற்றில், சமூகம் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூலமாக வழங்கப்பட்ட தரப்படுத்தல்களின் மூலம் மேம்பாட்டிற்கான முன்னுரிமைப் பகுதிகள் அடையாளங்காணப்பட்டன.

கல்விச் சேவைகளைப் பொறுத்தவரை, சமூகத்துடன் மேற்கொள்ளப்பட்ட இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலைக் கல்வி முன்னுரிமையுடையதாக அடையாளம் காணப்பட்டது.

### 1.5.5 செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம்

மூன்று மாவட்டங்களிலும் உள்ள சமூக குழுக்கள், வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகளுக்கான குறிப்பிட்ட குறிகாட்டிகளின் தொகுப்பொன்று அடையாளம் காணப்பட்டது. இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் செயற்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டன:

| **இரண்டாம் நிலைக் கல்வி சேவை வழங்கலின் அம்சங்கள்** | **குறிகாட்டிகள்** |
|---|---|
| அணுகல் | • கிராமசேவகர் பிரிவுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பாடசாலைக்குச் செல்லுதல்<br>• பாடசாலைக்கு சீராக வருகை தருதல்<br>• வருகை தராமைக்கான காரணங்கள்<br>• தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தருதல் |
| தரம் | • தரத்துடனான திருப்தி |
| வசதிகள் | • கிடைக்கும் தன்மை<br>• திருப்தி |
| ஆசிரியர்கள் | • கிடைக்கும் தன்மை<br>• ஆசிரியர்களின் தரம்<br>• ஆசிரியர்களின் நடத்தை<br>• கற்பித்தல் அணுகுமுறை |
| அசௌகரியங்கள் | • தண்டனைகள்<br>• துஷ்பிரயோகம்<br>• பாகுபாடு<br>• மறைமுக செலவுகள் |

## 1.6. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பகுதிகள்

கீழுள்ள விளக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, போறத்தீவுபற்று, மண்முனை தென்மேற்கு, மற்றும் கோரளைப்பற்று தெற்கு போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பிரதேச சபைகள் மற்றும் கல்வி வலய அலுவலங்களுக்குட்பட்ட பல பகுதிகளை இந்த ஆய்வானது உள்ளடக்கியுள்ளது.


| **பிரதேச செயலகபிரிவு/பிரதேச சபை/ வலயக்கல்வி அலுவலகம்** | **கிராமசேவகர் பிரிவு (GNs)** | **கிராமங்களின் எண்ணிக்கை** | **குடும்பங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவு / ஏறாவூர்பற்று பிரதேச சபை / மட்டகளப்பு மத்திய வலயக் கல்வி அலுவலகம் | மீராக்கேணி | 9 | 1485 |
| | மிச்நகர் | 7 | 2063 |
| | ஐயங்கேணி முஸ்லிம் | 3 | 840 |
| போறதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவு / போறதீவுப்பற்று பிரதேச சபை / வெல்லாவெளி–பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம் | சின்னவத்தை | 3 | 435 |
| | கணேசபுரம் | 1 | 420 |
| | கோவில் போறத்தீவு மேற்கு | 1 | 415 |
| | வன்னிநகர் | 1 | 409 |
| | மாவேற்குடா | 3 | 434 |
| | செல்வபுரம் | 1 | 337 |
| மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவு / மண்முனை தெற்கு பிரதேச சபை / பட்டிப்பளை – மட்டகளப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் | கடுக்காமுனை | 5 | 480 |
| | அரசடித்தீவு வடக்கு | 2 | 308 |
| | மகிழடித்தீவு தெற்கு | 3 | 576 |
| | முனைக்காடு மேற்கு | 4 | 327 |
| | முனைக்காடு வடக்கு | 2 | 369 |
| | கொக்கட்டிச்சோலை | 3 | 586 |
| கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவு/ கோரளைப்பற்று பிரதேச சபை/ கல்குடா வலயக் கல்வி அலுவலகம் | கிரான் கிழக்கு | 3 | 1197 |
| | கோரகல்லிமடு | 3 | 677 |
| | தேவபுரம் | 2 | 656 |
| | திகிலிவேட்டை | 5 | 423 |
| கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவு/ஓட்டமாவடி பிரதேச சபை/ கல்குடா வலயக் கல்வி அலுவலகம் | வாகனேரி | 5 | 462 |

# 2. பிரதான கண்டறிவுகள்

## 2.1. இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல்

கீழே தரப்பட்டுள்ள **விளக்கப்படம் 1** இல் காட்டப்பட்டுள்ளவாறு, பாடசாலை வருகை தொடர்பான இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்விலிருந்து பெறப்பட்ட தரவானது, பெரும்பாலான இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் தமது கிராமசேவகர் பிரிவுகளிலுள்ள பாடசாலைகளுக்கே வருகைத் தருகின்றனர் எனவும் போறதீவுப்பற்று பிரிவிலிருந்து அதிகளவான மாணவர்கள் கிராமசேவகர் பிரிவுகளுக்கு வெளியிலுள்ள பாடசாலைகளுக்கு வருகை தருவதையும் காட்டி நிற்கின்றது (பிரிவுக்கு வெளியிலுள்ள பாடசாலைகளுக்கான வருகை 49%).


**விளக்கப்படம் 1: ஒரு கிராமசேவகர் பிரிவுக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள பாடசாலைக்குச் செல்லல்**




கிராமசேவகர் பிரிவுகளுக்கு வெளியேயுள்ள பாடசாலைகளுக்கு வருகைதருவதற்கான காரணங்களை ஆராய்கின்ற போது **விளக்கப்படம் 2** இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அணுகல் தொடர்பான பல சிக்கல்கள் இங்கு காணப்படுகின்றன. உதாணமாக, நான்கு பிதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் தமது பிரிவில், தரம் 5 வரை மட்டுமே வகுப்புகள் நடாத்தப்படுவதாகவும் வசதிகள் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாகவே அவர்களுடைய கிராமசேவகர் பிரிவுகளுக்கு வெளியிலுள்ள பாடசாலைகளுக்கு வருகை தருவதாகவும் சுட்டிக்காட்டினர். கோரளைப்பற்று தெற்கு, மண்முனை தென்மேற்கு மற்றும் போறதீவுப்பற்று பிரிவுகளில் பதிலளித்தவர்கள் தமது கிராமசேவகர் பிரிவில் பாடசாலை இல்லாததனால் கிராமசேவகர் பிரிவிற்கு வெளியிலுள்ள பாடசாலைக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினர்.

ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும் கிராமசேவகர் பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு செல்வதற்கான மற்றொரு காரணமாக ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாடசாலை சிறார்கள் மூலமாக அடையாளங் காணப்பட்டது. பெற்றோர்கள் சென்ற பாடசாலைகளுக்குச் செல்வதற்கான விருப்பம் மற்றும் பாலின ரீதியாக பிரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு செல்வதற்கான விருப்பம் போன்றன ஏறாவூர் பிரிவிற்கு வெளியிலுள்ள பாடசாலைக்கு செல்வதற்கான இரண்டு தனித்தன்மை வாய்ந்த காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2: கிராமசேவகர் பிரிவுக்கு வெளியே உள்ள பாடசாலைக்கு செல்வதற்கான காரணங்கள்**





## 2.2. இரண்டாம் நிலை கல்வி சேவைகளுடனான தரம் மற்றும் திருப்தி


நான்கு பிரசே செயலகப் பிரிவுகளிலும் உள்ள பெற்றோர்கள் மற்றும் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த திருப்தியினையே **விளக்கப்படம் 3** சுட்டிக்காட்டுகின்றது. பெரும்பாலானோர் அவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வித்தரத்துடன் உயர்ந்தளவான திருப்தியினையோ, ஓரளவான திருப்தியினையோ அடைந்துள்ளனர். முறையே **4, 5, 6,** மற்றும் **7** ஆகிய **விளக்கப்படங்கள்** கிராமசேவகர் பிரிவு அடிப்படையிலான திருப்தி மட்டங்களை வழங்குகின்றன. அநேகமான கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் அவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியில் உயர்ந்தளவான திருப்தியினையோ அல்லது ஓரளவான திருப்தியினையோ அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினர். இருப்பினும், மீராக்கேணி, வாகனேரி, திகிலிவேட்டை, கோரகல்லிமடு, முனைக்காடு வடக்கு, சின்னவத்தை மற்றும் செல்வபுரம் போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் குறைந்தளவான திருப்தியினைக் காணக்கூடியதாக உள்ளது. அக்குறைந்தளவான திருப்திக்கு வழங்கப்பட்ட காரணங்கள் பின்வருமாறு: .

- குறிப்பிட்ட பாடங்களை கற்பிப்பதற்கு பொருத்தமான ஆசிரியர்களின் பற்றாக்குறை
- ஆசிர்கள் நேரத்திற்கு வருகை தராமை,
- மேலதிக வகுப்புகளுக்கான வாய்ப்புகள் இன்மை,
- செய்முறை வகுப்புகள் நடத்தப்படாமை,
- தரம் 9 வரை மட்டுமே வகுப்புகள் நடைபெறுகின்றன,
- அத்தியாவசியமான உடகட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை.


**விளக்கப்படம் 3: கல்வி தரம் குறித்த ஒட்டுமொத்த திருப்தி**




விளக்கப்படம் 4: ஏறாவூர்நகர பிரிவின் கல்வித் தரம் குறித்த திருப்தி





விளக்கப்படம் 5: கோறளைப்பற்று பிரிவின் கல்வித் தரம் குறித்த திருப்தி




விளக்கப்படம் 6: மண்முனை தென்மேற்கு பிரிவின் கல்வித் தரம் குறித்த தருப்தி





விளக்கப்படம் 7: போறதீவுப்பற்று பிரிவின் கல்வித் தரம் குறித்த திருப்தி




**விளக்கப்படம்** 8 இல் காட்டப்பட்டுள்ளவாறு, நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 50 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்கு செல்வதுடன் போறதீவுப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கில் 70 சதவீதமான மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்கு செல்கின்றனர். அப்பிரிவுகளிலுள்ள பாடசாலைகளிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியின் தரக் குறைப்பாடுகளினால், வகுப்புகளுக்கு செல்ல அவர்கள் நிர்பந்திக்கப்படுவதை இது சுட்டிக்காட்டுகின்றது.

**விளக்கப்படம் 8: தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**





**முறையே** 9, 10, 11 மற்றும் 12 ஆகிய **விளக்கப்படங்கள்** கிராமசேவகர் பிரிவுகளின் அடிப்படையில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு செல்கின்ற மாணவர்களின் விகிதத்தினை வழங்குகின்றன. உள்ளூர் மட்டங்களில் பெருமளவான மாணவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்கின்றமையானது, கிராமசேவகர் பிரிவுகளுக்குள்ளே காணப்படுகின்ற பாடசாலைகளின் கல்வி தரத்திலுள்ள பிரச்சினைகளுக்கான ஒரு அறிகுறியாக இருக்கலாம். மேலதிக அறிவினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு, பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படாமை, பாடசாலைகளில் கற்பிக்கபட்டவற்றை புரிந்துகொள்வதிலுள்ள கஷ்டங்கள், ஆசிரியர்களின் போதிய கவனமின்மை மற்றும் நண்பர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வதன் காரணமாக தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுதல் போன்றன அவர்கள் தனிப்பட்ட வகுப்புகளுக்கு செல்வதற்கான காரணங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.


**விளக்கப்படம் 9: ஏறாவூர்நகர பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**





**விளக்கப்படம் 10: கோறளைப்பற்று பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**



**விளக்கப்படம் 11: மண்முனை தென்மேற்கு பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**




**விளக்கப்படம் 12: போறதீவுப்பற்று தென்மேற்கு பிரிவில் தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**





## 2.3. வசதிகள்

நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கின்ற வசதிகள் தொடர்பான ஒரு கண்ணோட்டத்தினை **விளக்கப்படம்** 13 வழங்குகின்றது. சமையலறை வசதிகள், மதிய உணவு மற்றும் "சுரக்ஷா" காப்பீடுகள் போன்ற வசதிகள் இந்நான்கு பிரதே செயலகப் பிரிவுகளிலும் குறைந்தளவிலேயே கிடைக்கின்றன. இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடிய "சுரக்ஷா" மாணவர் காப்பீட்டுத் திட்டத்தினைப் பொறுத்தவரையில், சில பதிலளிப்பாளர்கள் இவ்வசதி பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அவர்களுக்கு காப்பீடு கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இவ்வசதியின் கிடைப்பனவு குறித்து அனைத்து மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தினை இது குறிப்பிடுகின்றது இதனால், மாணவர்கள் இந்நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியடைவர் குறிப்பாக, வசதிகள் குறைந்த பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிகப்பயன் அடைவார்கள். மதிய உணவினைப் பொறுத்தவரையில், ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அல்லது 100 மாணவர்களுக்கும் குறைவாக இருக்கின்ற பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றது. இது இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்படாததால், ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் இந்த வசதி குறைவாக இருந்தமையை ஆய்வு பிரதிபலித்தற்கு இதுவே காரணமாகின்றது. இருப்பினும், ஆரம்ப நிலை பாடசாலைகளில் உள்ள தமது இளைய சகோதரர்கள் மதிய உணவினைப் பெற்றுக்கொள்வதால் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் மதிய உணவினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு எதிர்பார்ப்பு இருப்பதாக தெரிகின்றது.

பாடசாலை மாணவர்களுள் கிட்டத்தட்ட 100 சதவீதமானவர்கள் சீருடைகளுக்கான கூப்பன்களை பெற்றுக்கொள்வதோடு, முன்பு சீருடைக்கான துணிகளைப் பெற்றுக்கொண்டதற்கு பதிலாக கூப்பன்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. சில மாணவர்கள் சாப்பத்துகள் அல்லது வேறு ஆடை வகைகள் போன்ற பிற தேவைகளுக்காக கூப்பன்களை பயன்படுத்தியுள்ளனர். மிகவும் பின்தங்கிய மற்றும் தூரப் பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் கூப்பன்களைப் பயன்படுத்தி சீருடைகள்/பொருட்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வணிக நிலையங்களை அடைய ஒரு குறிப்பிட்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால் (போக்குவரத்துச் செலவு, பயண நேரம், காலவிரயம் - கூலித்தொழிலாளிகளுக்கு), இது அம்மாணவர்களுக்கு/ பெற்றோர்களுக்கு கடினமானதாக அமையக்கூடும் என்பது சீருடை கூப்பன்களில் காணப்படுகின்ற பிரதிகூலமாக அமைகின்றது.


**விளக்கப்படம் 13: வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**





## 2.4. மேலதிக கட்டணங்கள்

சில மாணவர்கள் தமது பாடசாலைகளுக்கு பல்வேறு கட்டணங்களை செலுத்த வேண்டிய கடாயத்தில் இருப்பதால் மேலதிக செலவுகள் ஏற்படுகின்றன என்பதையும் இந்த ஆய்வானது வெளிப்படுத்துகின்றது. **விளக்கப்படம்** 14 இல் காட்டப்பட்டுள்ளபடி, கேட்கப்பட்ட கட்டணங்கள் பெரும்பாலும் பணமாக இருந்தாலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே பணம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மாணவர்கள் கட்டணங்களை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுகளைப் பெற்றிருந்தாலும், **விளக்கப்படம்** 15 இல் குறிப்பிடப்பட்டிருப்பது போல ஒரு குறிப்பிடப்பட்டளவான மாணவர்கள் பற்றுச்சீட்டுகள் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களுடைய சட்டப்பூர்வமான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய பரிமாற்றங்கள் தொடர்பில் விசாரணை தேவைப்படலாம்.

**விளக்கப்படம் 14: பாடசாலைகளால் கோரப்பட்ட மேலதிக கட்டணங்கள்**




**விளக்கப்படம் 15: பாடசாலைக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகள்**




## 2.5. ஏனைய அசௌகரியங்கள்


**விளக்கப்படம் 16** இல் காட்டப்பட்டுள்ளவாறு ஆய்வு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களில் சிலர் அவர்களுடைய பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்களை எதிர்கொண்டதாக குறிப்பிட்டனர்.

**விளக்கப்படம் 16: பாடசாலைகளில் வழங்கப்பட்ட தண்டனை தொடர்பான விடயங்கள்**





பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டணைகள் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தாலும் **விளக்கப்படம் 17** இல் காட்டப்பட்டுள்ளது போல, நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்கு அடிக்கடி வழங்கப்படும் தண்டனை முறையாக இது இருக்கின்றது.

**விளக்கப்படம் 17: மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனைகளின் வகைகள்**





**விளக்கப்படம் 18** மற்றும் **விளக்கப்படம் 19** இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, பாடசாலைகளில் நிகழும் பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகமான (உடல், உள, வாய்மொழி) சம்பவங்கள் குறித்தும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். அறிவிக்கப்பட்ட விடயங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தாலும், மனித உரிமை மீறல்கள் மீது தீவிரமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய துஷ்பிரயோகம் மற்றும் பாகுபாடு போன்ற இத்தகைய விடயங்களில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதையே இது வேண்டி நிற்கின்றது.

**விளக்கப்படம் 18: பாடசாலைகளில் நிகழும் பாரபட்சமான நிகழ்வுகள்**




**விளக்கப்படம் 19: பாடசாலைகளில் நிகழும் துஷ்பிரயோகங்கள்**




கல்விதரத்தினைப் பாதிக்கக்கூடிய ஆசிரியர்களோடு தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகள் (விளக்கப்படம் 20 ஐப் பார்க்கவும்) குறித்துமாணவர்களும் பெற்றோர்களும் அறிவித்தனர். ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவானது ஆசிரியர்கள் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகளைக் கொண்டிருப்பதை காணமுடிகின்றது.

**விளக்கப்படம் 20: ஆசிரியர்கள் தொடர்பான பிச்சினைகள்**



# 3. இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு

மட்டக்களப்பு மாவட்ட ஆய்வுப் பிரதேசத்தில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலின் செயற்திறனுக்கு கொடுக்கப்பட்ட மதிப்பீட்டினை **விளக்கப்படம் 21** குறிக்கின்றது. ஆய்வுப் பிரதேசங்களின் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலுள்ள இரண்டாம் நிலைக் கல்வி சேவைகளுக்கு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைக் கல்வி சேவைப் பயனர்களின் உயர் திருப்தியின் சதவீதங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, நிறக்குறியீடுகள் பின்வருவனவற்றைக் குறிக்கின்றன:

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| (சிவப்பு) | 40% இற்கும் குறைவான உயர் திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| (மஞ்சள்) | 40%-60% இற்கு இடைப்பட்டஉயர் திருப்தியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான உயர் திருப்தியுடைய பயனர்கள் | செயல்திறனைப் பராமரிக்க வேண்டும் அல்லது முன்னேற்றங்கள் தொடர்ந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் |

ஆய்வுப் பிரதேசத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இரண்டாம் நிலைக் கல்வி வழங்கல் தொடர்பாக உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக **விளக்கப்படம் 21** இல் காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 21: இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள்**

| | குடிநீர் | கழிவறை | நூலகம் | விஞ்ஞான ஆய்வுக்கூடம் | மதிய உணவு | பாடப்புத்தகம் | கணினிக்கூடம் | ஆசிரியர்கள் | சமையலறை | சுரக்ஷா பாப்புறுதி | சீருடை | சிற்றுண்டிச்சாலை | விளையாட்டு மைதானம் | எல்லைச்சுவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜயங்கேணி முஸ்லிம் | 100% | 79% | 58% | 60% | 100% | 36% | 62% | 75% | 64% | 0% | 25% | 56% | 33% | 71% |
| மிச்நார் | 88% | 69% | 58% | 54% | 54% | 60% | 47% | 70% | 52% | 25% | 46% | 53% | 53% | 72% |
| மீராக்கேணி | 70% | 69% | 40% | 26% | 50% | 54% | 51% | 60% | 27% | 24% | 39% | 50% | 28% | 15% |
| தேவபுரம் | 67% | 48% | 60% | 60% | 50% | 48% | 15% | 62% | 11% | 57% | 33% | 37% | 21% | 27% |
| மகிழடித் தெற்கு | 63% | 65% | 41% | 38% | 50% | 47% | 29% | 69% | 41% | 0% | 59% | 27% | 70% | 59% |
| கிரான்கிழக்கு | 59% | 36% | 52% | 46% | 21% | 56% | 35% | 36% | 25% | 22% | 40% | 18% | 21% | 65% |
| அரசடித்தீவு வடக்கு | 55% | 64% | 50% | 45% | 0% | 22% | 40% | 80% | 25% | 0% | 55% | 64% | 75% | 64% |
| கோரகல்லிமடு | 52% | 25% | 26% | 13% | 25% | 25% | 17% | 43% | 0% | 17% | 54% | 8% | 9% | 24% |
| கணேசபுரம் | 50% | 23% | 0% | 0% | 0% | 20% | 0% | 69% | 18% | 71% | 77% | 10% | 0% | 17% |
| வாகனேரி | 47% | 20% | 0% | 0% | 33% | 20% | 8% | 47% | 8% | 0% | 80% | 20% | 0% | 0% |
| கோவில் போறத்தீவு மேற்கு | 40% | 46% | 58% | 58% | 83% | 85% | 62% | 69% | 67% | 25% | 77% | 25% | 100% | 92% |
| முனைக்காடு மேற்கு | 40% | 36% | 60% | 50% | 0% | 20% | 27% | 55% | 0% | 33% | 36% | 27% | 29% | 27% |
| கொக்கட்டிச்சோலை | 39% | 24% | 6% | 21% | 57% | 50% | 0% | 56% | 24% | 0% | 44% | 44% | 22% | 22% |
| சின்னவத்தை | 38% | 8% | 11% | 11% | 20% | 31% | 8% | 8% | 11% | 0% | 23% | 14% | 0% | 0% |
| செல்வபுரம் | 36% | 30% | 0% | 0% | 80% | 50% | 0% | 42% | 38% | 0% | 25% | 0% | 0% | 0% |
| மாவேற்குடா | 33% | 38% | 31% | 31% | 0% | 69% | 17% | 46% | 0% | 0% | 38% | 23% | 31% | 46% |
| திகிலிவேட்டை | 33% | 11% | 20% | 22% | 25% | 55% | 30% | 9% | 25% | 0% | 36% | 20% | 10% | 17% |
| கடுக்காமுனை | 29% | 13% | 38% | 31% | 0% | 43% | 18% | 53% | 50% | 27% | 53% | 33% | 10% | 7% |
| முனைக்காடு வடக்கு | 27% | 31% | 31% | 8% | 0% | 17% | 33% | 38% | 0% | 60% | 62% | 15% | 0% | 0% |
| வன்னிநகர் | 25% | 42% | 67% | 42% | 0% | 92% | 33% | 82% | 50% | 33% | 92% | 0% | 17% | 58% |

40% இற்கும் குறைவான உயர் திருப்தியுடைய பயனர்கள்

40%-60% இற்கு இடைப்பட்ட உயர் திருப்தியுடைய பயனர்கள்

60% இற்கும் அதிகமானஉயர் திருப்தியுடைய பயனர்கள்

# 4. பரிந்துரைகள்


## 4.1 சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்

### 4.1.1. உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்


பதிலளிப்பாளர்களால் அடையாளம் காணப்பட்ட உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முடிவுகள் காட்டி நிற்கின்றன (**விளக்கப்படம் 22** ஐப் பார்க்கவும்). ஒட்டுமொத்தமாக நீர் வழங்கல், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வடிகால் வசதிகள் போன்ற மூன்று முன்னுரிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகளை **விளக்கப்படங்கள் 23, 24, 25** மற்றும் **26** போன்றன சுட்டிக்காட்டுகின்றன. நீர் வழங்கல், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சுகாதார வசதிகள் போன்றன நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக காணப்படுவதால் இவை உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகளாக காணப்படுகின்றன.


**விளக்கப்படம் 22: உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**




**விளக்கப்படம் 23: ஏறாவூர்நகர பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**





**விளக்கப்படம் 24: கோரளைப்பற்று பிரிவில் உடனடிசேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள்**



**விளக்கப்படம் 25: மண்முனை தென்மேற்கு பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**




**விளக்கப்படம் 26: போறதீவுப்பற்று பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்ற பகுதிகள்**




பொதுவாக, இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் தொடர்பாக பதிலளித்தவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்திய அதேவேளை பாடசாலைகளில் உள்ள தேவையான வசதிகளின் பற்றாக்குறை, வசதிகளுக்கான பராமரிப்பு இன்மை, முறைப்பாடுகளை அடையாளம் காண்பது தொடர்பாக அரசாங்க அதிகாரிகளிடமிருந்து உரிய பதிலின்மை மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் உள்ள அரசியல் ரீதியான நிலைமை போன்றன அதிருப்திக்கான காரணங்களாக அவர்கள் அடையாளப்படுத்தினர். இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலை முன்னேற்றுவதற்காக பதிலளித்தவர்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகளானது, இரண்டாம் நிலைக் கல்விச் சேவைகள் தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் காண்பதில் அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளிடம் இருந்து தீவிரமான ஈடுபாட்டின் அவசியத்தினை வலியுறுத்துகின்றன.

### 4.1.2. ஏனைய பரிசீலனைகள்

இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவானது, இரண்டாம் நிலைக் கல்வித்துறைக்கான முன்னேற்றங்கள் மற்றும் சீர்த்திருத்தங்களை திட்டமிடுவதற்கான ஒரு சிறந்த அளவுகோலினை (குறிப்பாக **விளக்கப்படம் 21** இல் தரப்பட்ட மதிப்பீடுகள்) வழங்குகின்றது.

உடனடி முன்னேற்றம் / கவனத்திற்கென அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் மற்றும் முன்னுரிமைகள் போன்றன துறைசார்ந்த எதிர்கால திட்டமிடல் மற்றும் வரவு செலவு திட்ட நடவடிக்கைகளின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கிராமசேவகர் பிரிவுகளில் இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் எவ்வாறு/ஏன் சமனற்றதாக வழங்கப்படுகின்றது மற்றும் எவ்வாறு அவற்றை திறம்பட அடையாளம் காண்பது போன்றவற்றினை புரிந்துகொள்வதற்கு கிராமசேவகர் பிரிவுகளிடையே கல்விச்சேவையினை வழங்குவதில் இருக்கின்ற பரந்த மாறுபாடானது மேலும் நெருக்கமாக ஆராயப்பட வேண்டும்.

## 4.2. முன்னோக்கிய நகர்வு

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வின் ஆரம்ப கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் அரச சிரேஷ்ட அதிகாரிகள், பிரதேச சபை செயலாளர்கள், வலையக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதி பணிப்பாளர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுக்கு கண்டறிவுகள் வழங்கப்பட்டன. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் இரண்டாவது செயற்பாட்டிற்கு முன்னர் சேவைகளை முன்னேற்றுவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையாளம் காணும் செயற்பாட்டுத்திட்டங்களை உருவாக்குவதற்கு, சேவை வழங்குனர்கள் மற்றும் சேவை பெறுனர்களுக்கிடையே கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகளை வழங்குவதற்கான செயற்பாட்டுத்திட்டங்கள் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது.

அக்டோபர் 2018 இல் 2வது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது, இது **விளக்கப்படம் 21** இல் சேவை வழங்கலுக்கு வழங்கப்பட்ட மதிப்பீட்டிற்கு எதிரான முன்னேற்றத்தினை கண்காணிப்பதை அனுமதிக்கும். செயற்பாட்டுத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட குறுகிய கால நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சேவை வழங்களின் திருப்தி முன்னேற்றமடைந்தால், மதிப்பீட்டு விளக்கப்படத்திலுள்ள நிற மாற்றங்கள் (**விளக்கப்படம் 21**) பின்வரும் திருப்திகரமான மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் என எதிர்ப்பார்க்கலாம். ஒரு நிறமாற்றம் தெளிவாக இல்லையென்றாலும், திருப்தி வீதத்தில் ஏற்படுகின்ற ஒரு அதிகரிப்பு சேவை வழங்கல் அடிப்படையில் ஒரு முன்னேற்றமாக கருதப்படுகின்றது.

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| (சிவப்பு) | 40% இற்கும் குறைவான உயர் திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| (மஞ்சள்) | 40%-60% இற்கு இடைப்பட்டஉயர் திருப்தியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான உயர் திருப்தியுடைய பயனர்கள் | செயல்திறனைப் பராமரிக்க வேண்டும் அல்லது முன்னேற்றங்கள் தொடர்ந்தார் இன்னும் சிறப்பாக இருக்கும் |

நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் மற்றும் **விளக்கப்படம் 21** இல் வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக முன்னேற்றத்தினை கண்காணித்தல் தொடர்பாக சமூகமானது, சேவை வழங்குனர்களை நெருக்கமாக பின்தொடருகின்ற போது சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டங்களில் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளை சேவை வழங்குனர்கள் செயற்படுத்த வேண்டும்.

இந்த இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை மூலம் வழங்கப்பட்ட தகவல்களை சிக்கல் நிறைந்தபகுதிகள் குறித்து மேலும் விசாராணைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தலாம், இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலின் சிக்கலான அடிப்படை பிரச்சினைகளை குறிக்கின்ற சமூகக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட அடையாளம் சார்ந்த பதிவுகள்தான் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் கண்டறிவுகள் என்பதை நினைவில் கொள்ளவும். இத்தகைய சிக்கல்களோடு இணைந்துள்ள காரணங்களை புரிந்துகொள்ள ஆழமான ஆய்வு தேவைப்படலாம்.

இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பின்வருவனவற்றினைப் பரிந்துரைக்கலாம்:

- இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டைமதிப்பீட்டை அடிப்படையாக் கொண்டு, குறிப்பாக பலவீனமான சேவை வழங்கல் செயற்பாடுள்ள பிரதேசங்களை அடையாளங் காணுதல்,
- சேவைகளை முன்னேற்றும் பொருட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய இடைவெளிகளை கண்டறிந்து திறமையான கல்விச்சேவை வழங்கலினை தடுக்கின்ற காரணங்கள் மற்றும் காரணிகளைப் பற்றி விசாரணை செய்தல்,
- தலையீடுகளின் சேர்க்கையானது, கல்விச்சேவை வழங்கலின் இடைவெளியினை அடையாளம் காண்பதற்கு தேவைப்படலாம்,
- சேவை வழங்கல் இடைவெளிகள் அடையாளம் காணப்பட்டவுடன், சேவை பயனர்களின் திருப்தி மட்டங்களைப் தொடர்ந்து தரநிலைக் குறியீட்டு மட்டங்களில் இருந்து வழங்கல் செயற்பாடு மேம்படுத்தப்பட்டதா என்பதை தீர்மானிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

# இணைப்பு 1: செயற்பாட்டுத்திட்டம்

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்வி சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - மட்டக்களப்பு மத்தி கல்வி வலய அலுவலகம்

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம் அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சுரக்ஷா காப்புறுதி | குறுங்காலம் | அதிபர் | ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் சர்வதேச பொது சேவைகள் (PSI) | 07.:.05.:.2018 | 04.:.08.:.2018 | பிரதிக்கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |
| 2 | பாடப்புத்தகங்கள் | குறுங்காலம் | அதிபர் | பொறுப்பான ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் | 07.:.05.:.2018 | 07.:.07.:.2018 | நேரடி நுழைவு அதிகாரி (DEO), ஏறாவூர் |
| 3 | சீருடை | குறுங்காலம் | அதிபர் | பொறுப்பான ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் | 07-05-2018 | 07-07-2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |
| 4 | நூலகம் | குறுங்காலம் | அதிபர் | நூலகத்துக்கு பொறுப்பாகவுள்ள ஆசிரியர், பாட ஆசிரியர்கள் | 07-05-2018 | 04-08-2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |
| 5 | விளையாட்டு மைதானம் | நீண்டகாலம் | அதிபர் | அரசியல் பிரமுகர்கள், அபிவிருத்தி மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், விளையாட்டு உபகரணங்கள் | 07-05-2018 | 06-05-2020 | பாடசாலை அபிவிருத்தி சங்கம் (SDC) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | சுற்றுமதில் | நீண்டகாலம் | அதிபர் | ஆரசியல் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் | 07-05-2018 | 06-05-2019 | ISW, உதவிக் கல்விப் பணிப்பாளர், உளவியல் கல்வி |
| 7 | விஞ்ஞான ஆய்வுக்கூடம் | நீண்டகாலம் | அதிபர் | ஆரசியல் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் (SDC), விஞ்ஞான ஆசிரியர், ஆய்வுக்கூட உதவியாளர் | 07-05-2018 | 06-12-2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர்- அபிவிருத்தி, தனிப்பட்ட திறன் கணிப்பீடு விஞ்ஞானம் (ISA Science) |
| 8 | சிற்றுண்டிச்சாலை | நீண்டகாலம் | அதிபர் | ஆசிரியர்கள், அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் நிறுவனம், பொது சுகாதார பரிசோதகர், PSI, ஆசிரியர்கள், | 07-05-2018 | 06-05-2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவம் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்வி சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்**

| தொ. இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம் அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்- தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சுரக்ஸா காப்புறுதி தொடாபில் பூரண தெளிவூட்ட நடவடிக்கை எடுத்தல் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA (பழைய மாணவர் சங்கம்) | மே 2018 | செப்டம்பர் 2018 | வலயக் கல்வி அலுவலக் |
| 2 | சிற்றுண்டிச்சாலை தொடர்பிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA (பழைய மாணவர் சங்கம்) | மே 2018 | செப்டம்பர் 2018 | வலயக் கல்வி அலுவலக் |
| 3 | மதிய உணவு வழங்குதல் தொடர்பிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA (பழைய மாணவர் சங்கம்) | மே 2018 | செப்டம்பர் 2018 | வலயக் கல்வி அலுவலக் |
| 4 | பாடப்புத்தகம் விநியோகம் | குறுங்காலம் | பாடசாலை அதிபர் | கோட்டக் கல்விப் பணிப்பாளர் | மே 2018 | செப்டம்பர் 2018 | வலயக் கல்வி அலுவலகம் |
| 5 | குடிநீர் | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA (பழைய மாணவர் சங்கம்) | ஜூன் 2018 | டிசம்பர் 2018 | வலயக் கல்வி அலுவலகம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | மலசல கூடம் | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA (பழைய மாணவர் சங்கம்) | ஜுன் 2018 | ஜுன் 2019 | வலயக் கல்வி அலுவலகம் |
| 7 | ஆசிரியர்கள் போதாமை | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | வலயக்கல்விப் பணிப்பாளர் | ஜுன் 2018 | ஜுன் 2019 | வலயக் கல்வி அலுவலகம் |
| 8 | நூலகம் | நீண்டகாலம் | பாடசாலை அதிபர் | பாடசாலை அபிவிருத்தி சங்கம், OBA (பழைய மாணவர் சங்கம்) | ஜுன் 2018 | ஜுன் 2019 | வலயக் கல்வி அலுவலகம் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி**

| தொ. இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம் அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் வசதிகள்** | | அதிபர் | மண்முனை தென்மேற்கு பிரதேச சபை பிரதேச சபை - மண்முனைத் தென் மேற்கு | மே 2018 | மே 2018 | பாடசாலை அபிவிருத்திக் குழு |
| | 1. மட்/மமே/ கடுக்காமுனை வாணி வித்தியாலயம், மட்/மமே/ கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வி. ஆகிய பாடசாலைகளுக்கு பிரதேச சபையிலிருந்து பெறும் குடி நீரினை தொடர்ச்சியாகவும் சீராகவும் பெற்றுக் கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல். | குறுங்காலம் | | | | | |
| | 2. எமது வலயத்தின் 21 பாடசாலைகளில் குடிநீரின் தரம் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு தெளிவூட்டல் | குறுங்காலம் | அதிபர் | பொது சுகாதார பரிசோதகர் | மே 2018 | ஜுன் 2018 | பாடசாலை அபிவிருத்திக் குழு |
| 2 | **சுரக்ஷா மாணவர் காப்புறுதி** | | அதிபர் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல் | மே 2018 | ஜுன் 2018 | பாடசாலை மட்ட சுரக்ஷா மாணவர் காப்புறுதி பொறுப்பாசிரியர் |
| | பாடசாலை மட்டத்தில் சுரக்ஷா காப்புறுதி தொடர்பான மீள் விழிப்புணர்வு நிகழ்வுகள் | குறுங்காலம் | | | | | |
| 3 | **மலசல கூட வசதி** | | சுகாதார கழகத்திற்கு பொறுப்பான ஆசிரியர் | பிரதி அதிபர் | மே 2018 | ஒக்டோபர் 2018 | வலயக் கல்விப் பணிமனை பிரதிநிதிகள் |
| | I. பாடசாலை மட்ட சுகாதாரக் கழகங்களை வலுப்படுத்தல் | குறுங்காலம் | | | | | |
| | II. வில்லுக் குளத்து நீரை மட்/மமே/ கடுக்காமுனை வாணி வித்தியாலயத்தின் தேவைகளுக்காக பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்தல். | நீண்டகாலம் | அதிபர் | பிரதேச சபை - மண்முனைத் தென் மேற்கு | ஜுன் 2018 | ஜுலை 2019 | அதிபர்<br>வலயக் கல்விப் பணிப்பாளர் |
| | III. மட்/மமே/கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வி. இன் மலசலகூடங்களைப் புனரமைப்புச் செய்தலும், புதிய மலசலகூட கட்டுமானமும் | நீண்டகாலம் | | மாகாணக் கல்வித் திணைக்களம் | ஜுன் 2018 | ஜுன் 2019 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | IV. கொக்கட்டிச்சோலை கிராம பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடலும், விழிப்பணர்வை ஏற்படுத்தலும். (ஆலயத்திற்கு வரும் பக்தர்களின பாடசாலை மலசலகூட பாவனை தொடர்பாக) | குறுங்காலம் | அதிபர் | கிராம அபிவிருத்திச் சங்கம் | ஜுன் 2018 | ஜுன் 2018 | அதிபர் |
| 4 | **நூலகப் பாவனை** | குறுங்காலம் | அதிபர் | பிரதி அதிபர் | ஜுன் 2018 | ஒக்டோபர் 2018 | வலயக் கல்விப் பணிமனை பிரதிநிதிகள் |
| | பாடசாலை மாணவர்களிடையே வாரத்தில் ஓர் நாள் 15 நிமிடம் காலை ஒன்றுகூடலில் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தலும், நூலகப் பாவனையைப் பரவலாக்கலும் | குறுங்காலம் | | | | | |
| 5 | **விஞ்ஞான ஆய்வுகூட பாவனை** | | | | | | |
| | I. ஆய்வுகூடச் செயற்பாடுகள், அமையத்திற்கு ஏற்ற உபகரணம் தயாரித்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை | குறுங்காலம் | உதவிக் கல்விப்பணிப் பாளர் - விஞ்ஞானம் | சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) வேல்ட் விசன் லங்கா | மே 2018 | மே 2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி |
| | II. மாணவர்களுக்கான விஞ்ஞான பாட செய்முறைப் பயிற்சிப்பட்டறை | குறுங்காலம் | உதவிக் கல்விப்பணிப் பாளர் - விஞ்ஞானம் | சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) | ஆகஸ்ட் 2018 | ஆகஸ்ட் 2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி |
| | III. விஞ்ஞான பாட செய்முறை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல். | குறுங்காலம் | உதவிக் கல்விப்பணிப் பாளர் - விஞ்ஞானம் - | வேல்ட் விசன் லங்கா | ஜுன் 2018 | ஜுன் 2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி |
| 6 | **கணினி ஆய்வுகூட பாவனை** | | | | | | |
| | I. கணினிகளைப் பாடசாலைகளுக்குப் பெற்றுக் கொடுத்தல். | நீண்டகாலம் | பிரதிக்கல்வி பணிப்பாளர் - திட்டமிடல் | மாகாணக் கல்வித் திணைக்களம் | ஜுலை 2018 | ஜுலை 2019 | வலயக் கல்விப் பணிப்பாளர் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | II. வேறு பாடசாலைகளில் தேவைக்கு அதிகமாகவுள்ள கணினிகளைத் தேவையுள்ள பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல். | குறுங்காலம் | பிரதிக்கல்வி பணிப்பாளர் - திட்டமிடல் | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாட இணைப்பாளர் | செப்டம்பர் 2019 | செப்டம்பர் 2019 | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| 7 | **விளையாட்டு மைதானம் தொடர்பாக** | | | | | | |
| | I. விளையாட்டு மைதானம் அற்ற பாடசாலைக ளுக்கு பாடசாலை மாணவர்களின் பாவனைக்கு பயன்படக்கூடிய மைதானங்களை இனங்காணல். | குறுங்காலம் | உதவிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி | சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (உடற்கல்வி), பிரதேச செயலகம் | செப்டம்பர் 2018 | செப்டம்பர் 2018 | பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி முகாமைத்துவம் |
| | II. விளையாட்டு மைதானம் கொண்ட பாடசாலைகளின் மைதானங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலும், விளையாட்டு மைதானம் அற்ற பாடசாலைகளுக்கு மைதானங்களைப் பெறக்கூடிய வழிகளை ஆராய்தலும் | நீண்டகாலம் | பிரதிக்கல்வி பணிப்பாளர் - திட்டமிடல் | மாகாணக் கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் | ஆகஸ்ட் 2018 | ஆகஸ்ட 2020 | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| 8 | **கற்பித்தல் அணுகுமுறைகள்** | | | | | | |
| | ஆசிரியர்களின் நேரான கற்பித்தல் அணுகுமுறை, மாணவர்களிடையே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலான செயற்பாடுகளை வலுப்படுத்தல் | குறுங்காலம் | அதிபர் | வலயக் கல்விப் பணிமனை பிரதிநிதிகள | மே 2018 | டிசம்பர் 2018 | வலயக் கல்விப் பணிப்பாளர் |

**இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை கண்டறிவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் குறித்த திருப்தியினை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் - கல்குடா வலயக் கல்வி அலுவலகம்**

| தொ.இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள் (எச்சேவைகள்) | குறுங்காலம் அல்லது நீண்டகாலம் | சேவைகளை வழங்குவதற்கு யார் பொறுப்பு | ஏனைய பங்குதாரர்கள்/தேவைப்படும் வளங்கள் | ஆரம்பித்த திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குடிநீர் வசதிகள் | 1)வீட்டில் இருந்து சுத்தமான குடிநீரை தினமும் கொண்டுவர ஊக்குவித்தல்<br>2)குழாய் இணைப்புக்களை பெற நடவடிக்கை எடுத்தல் | பெற்றோர் ,வகுப்பாசிரியர் | பிரதேச சபை | 01-06-2018 | 31-08-2018 | புாடசாலை முகாமைத்துவக் குழு |
| 2 | மலசல கூட வசதிகள் | 1) இருக்கும் மலசல கூடங்களை இயன்றவரை பாவனைக்குட்படுத்தல் விழிப்புணர்வு வழங்கல்<br>2) மாணவர்களை பாவனைக்கான நீரை கலன்களில் கொண்டுவர ஊக்குவித்தல்<br>3) மழைநீரை தேக்கும் வழிமுறைகளை ஏற்படுத்தல் - நீண்டகாலம்<br>4) சமூக மட்ட அமைப்புக்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல் | பொறுப்பாசிரியர் மற்றும் சுகாதாரக் கழகம் | ஆசிரிய ஆலோசகர் சுகாதாரம், உடற்கல்வி | 02-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 3 | நூலகம் | 1) நூலக பாவனை பற்றிய விழிப்புணர்வு<br>2) நடைமுறையில் நூலகப் பாடத்தினை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்தல்<br>3) வகுப்பறைகளில் நடமாடும் நூலக வசதிகளை நடைமுறைப்படுத்தல்<br>4) புத்தகங்களைச் | அதிபர், நூலகப் பொறுப்பாசிரியர் | ஆசிரிய ஆலோசகர் நூலக சேவை | 01-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சேகரித்து தற்காலிகமாகவேனும் நூலகங்களை அமைத்தல்<br>5) நிலையான நூலகங்களை அமைக்க நடவடிக்கை எடுத்தல் | | | | | |
| 4 | விஞ்ஞான ஆய்வுகூடம் | 1) ஆய்வுகூட பாவனை பற்றிய விழிப்புணர்வு<br>2) நடைமுறையில் உள்ள ஆய்வுகூட பாவனை நடைமுறைப்படுத்துவதனை உதிப்படுத்தல்<br>4) தற்காலிக ஆய்வுகூடங்களை அமைக்க நடவடிக்கை எடுத்தல் | பாடசாலை நிர்வாகக் குழு | ஆசிரிய ஆலோசகர் விஞ்ஞானம் | 01-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 5 | மதிய உணவு | தரம் 1 தொடக்கம் 5 வரை இடையுணவு வழங்கும் தரத்தை உறுதிப்படுத்தல் | அதிபர் | ஆசிரிய ஆலோசகர் சுகாதாரம், உடற்கல்வி | 02-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 6 | பாடப்புத்தகங்கள் | 1) பாடப்புத்தக மீள்பாவனை தொடர்பான விழிப்புணர்வு செய்தல்,<br>2) புத்தகம் பேணுதல் தொடர்பாக பாராட்டி பரிசில் வழங்குதல். புத்தகங்களை மீள்கையளித்தலை உறுதிப்படுத்தல்<br>3) அண்மையிலுள்ள பாடசாலையுடன் தொடர்பினை ஏற்படுத்தி மீள பாவனைகுட்படத்தக்கூடிய புத்தகங்களைப் பெற்று வழங்குதல் | பொறுப்பாசிரியர் | கோட்டக்கல்விப் பணிப்பாளர் | 03-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 7 | கணினிக்கூடம் | தரம் 1 தொடக்கம் 5 வரை கணினியறை பாவனை தரத்தை உறுதிப்படுத்தல் | பொறுப்பாசிரியர் | அதிபர் | 04-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | ஆசிரியர்கள் | 1) கிராம மட்டங்களில் படித்த இளைஞர் யுவதிகளின் ஒத்துழைப்பினைப் பெறுதல்<br>2) அரச சார்வற்ற நிறுவனங்களின் உதவியினைப் பெறுதல்<br>3) தரவட்டத்தினை உறுதிப்படுத்தல்<br>4) நடமாடும் ஆசிரியர் வட்டத்தினை நடைமுறைப்படுத்தல்<br>5) வகுப்பறையில் பாடம் நடைபெறுவதனை உறுதிப்படுத்தல்<br>6) பாடத்துறைக்குப் பொருத்தமான ஆசிரியர்களை சமப்படுத்தல் மேற்கொள்ளுதல் | உதவிக் கல்விப் பணிப்பாளர் | கோட்டக்கல்விப் பணிப்பாளர் | 01-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 9 | சமையலறை | பாடசாலைக் கண்காணிப்புக் குழுவொன்றினை நியமித்தல் | வலய உத்தியோகத்தர்கள் | பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் | 02-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 10 | சுரக்ஷா காப்புறுதி | 1) வகுப்பறை ரீதியாக இது குறித்த அறிவுறுத்தலை வழங்கச் செய்தல்<br>2) மாணவர் ஒன்று கூடலின் போது அது தொடர்பான அறிவுறுத்தலை ஏற்பாடு செய்தல்<br>3) பெற்றார்களுக்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் | அதிபர், வகுப்பாசிரியர் | கோட்டக்கல்விப் பணிப்பாளர் | 03-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | சீருடை | 1) சீருடை தரம் தொடர்பாக மாணவர்களுக்கான விழிப்புணர்வு<br>2) பெற்றார்களுக்கான விழிப்புணர்வு | பொறுப்பாசிரியர் | கோட்டக்கல்விப் பணிப்பாளர் | 04-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 12 | சிற்றுண்டிச்சாலை | 1) சீற்றுாண்டிசாலையின் தரத்தை உறுதிப்படுத்தல்.<br>2) போசணை பெறுமானமுள்ள சிற்றுாண்டி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்<br>3)உணவகை ,விலை பட்டியல் காட்சிப்படுத்தல்<br>4) பிற உணவுப்பொருட்களை தடுக்குகும் விழிப்புணர்வு நடவடிக்கை | பாடசாலை நிர்வாகக் குழு | பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் | 01-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 13 | விளையாட்டு மைதானம் | நலன் விரும்பி , பிரதேச சபையின் உதவியினை பெறல் | பாடசாலை நிர்வாகக் குழு | பிரதேச சபை உறுப்பினர்கள் | 02-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |
| 14 | எல்லைச்சுவர் | நலன் விரும்பி , பிரதேச சபையின் உதவியினை பெறல் | பாடசாலை நிர்வாகக் குழு | பிரதேச சபை உறுப்பினர்கள | 03-06-2018 | | பாடசாலை நிர்வாகக் குழு |

“சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக அபிவிருத்தியை எட்டும் பொருட்டு பொதுமக்கள் சார் சமூக அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்குமிடையேயுள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்” எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் கீழ் வறுமை ஆராய்ச்சி நிலையமானது மட்டகளப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வகளை (eCRC) மேற்கொண்டது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வகளானது (eCRC), தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப்பகுதியில் காணப்படுகின்ற

(i) பிரதேச சபையின் சேவைகள் வழங்கல்
(ii) இரண்டாம் நிலை கல்விச்சேவை வழங்கல்

ஆகிய இரண்டு துறைகளின் சேவைத்தரம், சேவை வழங்குனர்களின் பொறுப்பு மற்றும் சேவை முன்னேற்றங்களை வேண்டி நிற்கினற பகுதிகள் போன்றவற்றினை தீர்மானிப்பதை இலக்காக கொண்டிருந்தது. தற்போது பொதுசேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் அணுகல், தரம் மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுவதற்கான கருவியாக அதேபோல சமூகப் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையினை (eCRC) பயன்படுத்த முயற்சிக்கும் நோக்குடன் முதலாவது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (நஊசுஊ) கண்டறிவுகளை இந்நத அறிக்கையானது வழங்குகின்றது. மூன்று மாவட்டங்களில் இருந்து பதிலளித்தவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட சேவை வழங்கலில் உடனடி கவனம் மற்றும் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) முடிவுகளானது வெளிக்காட்டி நிற்கின்றன. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) ஆரம்ப முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதோடு சேவை வழங்குனர்கள் மற்றும் சேவை பெறுபவர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்த ஆய்வின் கண்டறிவுகளை பரவலாக்கவதற்கும், செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறைச் சீர்த்திருத்தங்கள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு இத்தகவல்களை பயன்படுத்துவதற்கும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



29 ஆர்.ஜி சேனநாயக்க மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி: +94(011) 2676 955, 4690200
தொலைநகல்: +94(011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

ISBN: 978-955-3628-08-4